1970 ஆகஸ்ட் 26]

ரஷ்யாவுக்குத் தமிழ்ப் படங்கள்

***32 வினா—திரு. கரு. சீமைச்சாமி:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) ரஷ்யாவுக்கு நல்ல தமிழ்ப் படங்களை அனுப்ப அரசு ஏற்பாடு செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

மதுரை செந்தமிழ் கல்லூரி

***33 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு கல்வி சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலுள்ள செந்தமிழ்க் கல்லூரி, தற்பொழுது கலைக் கல்லூரியாக மாற்றியமைக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் காரணமென்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) இல்லை. ஆனல், 1969-70-ல் தமிழில் ஒரு மூன்று வருடப் பட்டப்படிப்பு துவக்க செந்தமிழ்க் கல்லூரிக்கு மதுரைப் பல்கலைக்கழகம் அனுமதி அளித்துள்ளது. இவ்விஷயம் முற்றிலும் பல்கலைக் கழகத்தினல் முடிவு எடுக்கப்படுவதாகும்.

புலவர் பொ. பொன்னம்பலம்: பேரவைத் தலைவரவர்களே. மதுரைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் அமைந்துள்ள மதுரையி லுள்ள செந்தமிழ்க் கல்லூரியில், தமிழக வரலாறு சம்பந்தமான பாடங்கள், கல்வெட்டுக்கள் சம்பந்தமான பாடங்கள் எடுக்கப் பட்டு, வேறு வகையில் பாடங்கள் இணைக்கப்பட்டிருப்பது உண்மையா? ஆமெனில், அதன் காரணம் என்ன என்பதை அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மதுரைப் பல்கலைக் கழகத்தினுடைய ஆட்சிக்குழு முடிவு செய்ததற் கிணங்க செந்தமிழ்க் கல்லூரியிலும், மற்ருெரு கல்லூரியிலும் தமிழை ஒரு பாடமாக வைத்து, அதற்குப் பட்டம் வழங்கும் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறது. பி.யூ.சி. ஸ்பெஷல் தமிழ் பி.ஏ., ஸ்பெஷல் தமிழ், பார்ட் 2, பார்ட் 3 என்று இரண்டு பிரிவுகள் அமைத்து, 6 தாள்கள் எழுதும் அளவுக்குத் தமிழில் கொடுக்கப் பட்டு, அதற்கு டிகிரி கொடுக்கும் சூழ்நிலை இருக்கிறது. மதுரைப் பல்கலைக் கழகம் முடிவு செய்து, மதுரை செந்தமிழ்க் கல்லூரி யிலும், மற்ருெரு கல்லூரியிலும் பி.யூ.சி. ஸ்பெஷல் டமில், புகுத்தப் பட்டது, 68-69-இல் புகுத்தப்பட்டது. 69-70-ல் பி.ஏ., ஸ்பெஷல் டமில் வைக்கப்படும் அளவிற்கு அனுமதி கிடைத்து, செந்தமிழ்க்

கல்லூரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மற்றக் கலைக் கல்லூரிகளிலுள்ள எல்லாக் கலைப் பாடங்களும் வரும் முறை இல்லை. தமிழிலே மட்டும் பி.ஏ. முறை பல்கலைக் கழகத்தின் அனுமதியின் பேரில் நிறுவப்பட்டிருக்கிறது.

Strike by students of Government Arts College, Madras

* 34 *Q*.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether the Government Arts College, Madras was closed for many days due to the students strike during the month of December, 1969; and

(*b*) if so, what the grievances of the students are?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பின்வரும் கோரிக்கைகளுக்காக, வேலைநிறுத்தம் நடந்தது.

(1) ஆசிரியப் பயிற்சி (பி.டி.) வகுப்பில் பொருளியல் பட்டதாரிகளையும் சேர்த்துக்கொள்ள வகை செய்தல்.

(2) மிகுதியான வேலை வாய்ப்பு ஏற்படுத்தல்.

(3) எல்லா வேலையில்லாப் பட்டதாரிகளுக்கும் மாதம் ரூ. 50 உதவித் தொகை அளித்தல்.

(4) உயர்நிலைப் பள்ளிகளில் பொருளியலை விருப்பப்பாடமாக ஏற்படுத்தல்.

Chairman of Sangeetha Nataka Sangam

* 35 *Q*.—THIRU K. SAHADEVA KANDER : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether a retired Principal of the Presidency College, Madras City has been appointed as the Chairman of the Sangeetha Nataka Sangam; and

(*b*) the grounds on which the selection has been made?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) டாக்டர் எஸ். ஜி. மணவாள ராமானுஜம் 1970, பிப்ரவரி 13-ம் நாள் முதல், மூன்றாண்டுக் கால அளவிற்குத் தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

(இ) அந்தப் பதவிக்கு எவ்வித குறிப்பிட்ட தகுதியும் வரையறுக்கப்படவில்லை. நிர்வாக அனுபவமிக்க டாக்டர் திரு. மணவாள இராமனுஜம் இந்தப் பதவியை வகிக்க சாலச் சிறந்தவர் என அரசு கருதியது.